# மேல் மாகாண அரச சேவையின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவின் தீயணைப்பு வீரர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்குள் தற்போது வெற்றிடமாக இருக்கும் தீயணைப்பு வீரர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்காக தகைமையை பூர்த்தி செய்திருப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01. பதவியின் பெயர் - தீயணைப்பு வீரர்**

(பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியத்தைக் கொண்டது)

**02. சம்பள அளவு மற்றும் சம்பள குறியீட்டு இலக்கம்**

சம்பள அளவு -ரூபா 49550 – 7x540 – 27x670 – 71420
சம்பள குறியீட்டு இலக்கம் - RS 1-2025

**03. வெற்றிடங்கள் - 24**

**04. கல்வித் தகைமை**

ஒரே தடவையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கல்விப் பொதுத் தராதர (சா.தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அந்த சந்தர்ப்பத்திலேயே அல்லது மற்றொரு மேலதிக சந்தர்ப்பத்தில் விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழி பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**05. உடல் தகுதி**

i. உயரம் 162 செ.மீ. இற்கு குறையாத மற்றும் உயிர்த்திணிவு குறியீடும் குறித்த வகையில் இருத்தல் வேண்டும்.
(உயிர்த்திணிவு குறியீடு 18.5 தொடக்கம் 24 வரை இருத்தல் வேண்டும்)

ii. அனைத்து அபேட்சகர்களும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவிக்கு உரிய கடமைகளை மேற்கொள்வதற்கு போதுமான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

iii. பார்வை தொடர்பான தேவை - மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகை வில்லை இன்றி கண் பார்வை குறைந்தது 6/6 மற்றும் 6/12 இடயிலும், நிறங்கள் தெரிவது சாதாரணமாகவும் இருத்தல் வேண்டும்.

iv. செயற்கை உடல் மாற்றங்கள் செய்யாதவராக இருத்தல் வேண்டும்.

**06. வேறு**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முந்தைய மூன்று (03) ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

iii. திருமணம் புரியாத ஆண் ஒருவராக இருத்தல் வேண்டும்.

iv. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும் என்பதோடு சட்டவிரோத செயல்களுக்கு தொடர்புபடாதவர் என பொலிஸ் அறிக்கை ஒன்றில் உறுதி செய்தல் வேண்டும்.

v. பதவிக்கு இணைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டு தகைமைகள் விண்ணப்பம் கோரும் அறிவித்தல்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**07. வயது**

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**08. ஆட்சேர்ப்பு முறை**

I. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் எழுத்து பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதோடு அந்த பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தொழில்முறை (நடைமுறை) சோதனை நடத்தப்படும்.

II. எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்முறை பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களை புள்ளிகளின் திறன் வரிசைக்கு அமைய வெற்றிடங்களுக்கு பயிலுநர் தீயணைப்பு வீரர்களாக விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவதோடு அவர்கள் ஓர் ஆண்டு பயிற்சி கற்கை ஒன்றை கற்றல் வேண்டும்.

**09. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை**

தீயணைப்பு வீரர் ஆட்சேர்ப்பு தொடர்பில் மற்ற அனைத்து விபரங்கள் மற்றும் நிபந்தனைகளும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் இணையதளத்தில் (kotte.mc.gov.lk) தரப்பட்டிருப்பதோடு அதில் தரப்பட்டிருக்கும் மாதிரிக்கு அமைய விண்ணப்பப் படிவத்தை தயாரித்து 2026.09.01 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்தில் கிடைக்குமாறு "மாநகர ஆணையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, இலக்கம் 06, புதிய வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற மற்றும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**மாநகர ஆணையாளர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை**